(முற்பகல் 10–50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மழை பெய்த காரணத்தினாலே வருத்தப்படுகின்றாரோ என்ற எண்ணம் வந்து விடக்கூடாது. மழை தேவையாக இருக்கின்றது ஆனால் அங்கே பாதைகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் தனி கவனம் செலுத்திக்கொண்டு இருக்கிறது. மலைப் பகுதிகளில் உள்ள பாதைகளில் அரசு கவனம் செலுத்தி அவற்றை சீரமைக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ள பாதைகள் அங்கே இருக்குமானால் அவைகளைப் பற்றி கடிதம் எழுதி கேட்கிறபோது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல்லை மாவட்டம் பால் உற்பத்திச் சங்கங்கள்.

621—(*வினா எண். 4417) திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்திச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடன் இணைக்கப் பட்டு விட்டனவா ?

(ஆ) இல்லையெனில், அவை எப்பொழுது இணைக்கப் படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி மாவட்ட பிரிவினைக்கு முன் அம் மாவட்டத்தில் மொத்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 660 ஆகும். இவற்றில் நாங்குநேரி மற்றும் ராதாபுரம் தாலுக்காக்களில் உள்ள 81 சங்கங்கள், கன்னியாகுமரி மாவட்ட பால்வள உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய விவகார எல்லையில் உள்ளன. மிகுதியுள்ள 579 சங்கங்களில், 305 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி

1987 மே 6]

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட சங்கங்களின் மாவட்ட வாரியான விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்	..	188
(2) வ. உ. சிதம்பரனார் மாவட்டம்	..	117
மொத்தம்	.. ..	305

(ஆ) மிகுதியுள்ள 274 சங்கங்களில் 169 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்படவில்லை. செயல்படும் 105 சங்கங்களும் புதிய வழித்தடங்கள் மாவட்ட ஒன்றியத்தால் ஆரம்பிக்கப்பட்டவுடன் இணைக்கப்படும்.

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே இருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கங்களில் சில சங்கங்கள் சில ஒன்றியங்களிலே இணைக்கப்படாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இணைக்கப்படும் போக்குவரத்து வழித்தடங்கள் சரியாக ஆனவுடன் இணைக்கப்படும் என்று சொன்னார்கள். அது இந்த ஆண்டு இணைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுவரும் 105 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களிலும், பால் உற்பத்தி மிகக்குறைவாக உள்ளதால் ஒன்றியத்திற்கு பால் அனுப்பாததால் திருநெல்வேலி மாவட்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்படவில்லை. அந்த அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டவுடனே இவ்வாண்டு இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் வழித்தடங்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் போகமுடியாமல் இருக்கின்றன. அதை உடனடியாக சீர் செய்ய வேண்டும். அந்தந்த கிராமங்களில் உற்பத்தியாகின்ற பால் எடுத்துப் போகமுடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. அதனால் சில பால் உற்பத்தியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே அந்த தடங்களை உடனடியாக நீக்கி போக்குவரத்து வசதி செய்து அதை எடுக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் கோவில்பட்டிக்கு பக்கத்திலேயிருக்கின்ற கிராமப்புறங்களில் இருந்து பால் வாங்க மறுக்கிறார்கள். இதை அரசு அறியுமா? அப்படி அறியுமானால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தகவல் இல்லை. தனியாக வினா போட்டால் பதில் அளிக்கலாம்.

மதுரை அழகர் கோவிலிலுள்ள முன் மண்டபம்

622—(*வினா எண். 5434)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அழகர் கோவிலின் முன்பகுதியில் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் உள்ள மண்டபம் அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், இதனை பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் அழகர் கோயிலின் முன் பகுதியில் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள மண்டபம் தற்போது அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லை.

(ஆ) மேற்படி மண்டபத்தை மராமத்து செய்து பாதுகாக்க 1979-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரை அழகர் கோயில் முன் பகுதியிலுள்ள மண்டபத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்க ரூ. 5,000-க்கு (ரூபாய் ஐயாயிரத்துக்கு மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. மேலும் அபாயகரமாக உள்ள மண்டபத்தின் பகுதிகளைப் பிரித்து கட்டுவதற்காக ஆகும் செலவினம் குறித்தும் மதிப்பீட்டினைத் தயாரித்து அனுப்புமாறு தொல்பொருள் ஆய்வுத் துறை, மதுரை இளநிலைப் பொறியாளரிடம் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு கிடைக்கப்பெற்றவுடன் உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகவே அந்த கோபுரம் அந்த நிலையிலேதான் உள்ளது. நான் 2 வருடங்களுக்கு முன்பாக அங்கே சென்று பார்த்தேன். அப்படியே இருந்தது. இப்போது